உ

கடவுள் துணை.

கலியுகசிந்து.

கடன்பத்திரம், கலிகாலக்கண்ணாடி

இம்மூன்று மடங்கி யிருக்கின்றன.

இவை சிறுமணவூர்

முனிசாமி முதலியாரவர்களால்

இயற்றப்பட்டு,

ஆதிபுரி

இரத்தினவேலு முதலியாரது

வாணீவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1911.

சென்னை நாராணமுதலி வீதி

52-வது நெ. வீடு.

கடவுள் துணை.

கலியுகச்சிந்து.

நாதநாமக்கிரியை ஆதிதாளம்.

பல்லவி.

காலத்தைப்பாராய் கலிகாலக்கொடுமையின்
கோலத்தைக்கேளாய்.

அநுபல்லவி.

காலத்தின்கோலத்தை ஞானத்தின்மேலொத்த
பாலொத்தமொழியாளே வேலொத்தவிழியாளே (கா)

சரணங்கள்.

அரிசிபடிரெண்டு பணமாய்முழிக்குது
ஐயையோஏழைகள் புழுகாய்துடிக்குது
வரியெல்லாந்தலைக்குமேல் வாரண்டாய்திரியுது
வாங்கியகடன்கேட்டால் கோட்டுக்கிழுக்குது
புலம்புதேகுடிகள்புரட்டாசைப்பிசிகூட பிளக்குதேவெய்யல்
நாட்டுப்புறங்களெல்லாம் ஓட்டம்பிடிக்குது
நஞ்சைபுஞ்சைகளெல்லாம் பஞ்சாய்பறக்குது
காடுமேடுகளெல்லாம் கட்டுதிட்டமாச்சுது
காக்காய்குருவிகூட பிழைபபதரிதாச்சி (கா)
மழையோமழையோவென்று மானம்பார்க்கலாச்சி
மாடுஆடுகள்பேச்சி புல்லுக்கலையலாச்சி
தரையுமஉலர்ந்துபோச்சி தண்ணீர்பன்னீராச்சி
தங்கத்தைவைத்தாலும் வட்டிகேழ்க்கலாச்சி
முறைகெட்டுபோச்சிதாயார்தமக்கைபோலே பெண்தேடலாச்சு
கொண்டமனைவிபேச்சு கூழுக்கலையலாச்சி
கூத்தியார்பாதத்தைக் கார்த்திருக்கலாச்சி
சொந்தபடிப்பெல்லாம் சூத்துக்குமணையாச்சி
சொல்லுமிங்கிலீசுக்கு நல்லபிழைப்பாச்சி (கா)
காட்டினில்மழையாச்சி கழனியுலர்ந்துபோச்சி
சலப்பைதாத்துக்கோலே யிரப்பிற்சொருகலாச்சி
போட்டவிரைகளெல்லாம் பொரியாய்பறந்துபோச்சி
பிள்ளைகுட்டிகளெல்லாம் ஏனோவிரைத்தோமென்று
யிரவும்பகலுமாக முறையிட்டிருக்கும்போது
எடுஎடுவாயிதா பிடிபிடிஆவென்று
ஏழெட்டுபேறுக வீட்டைவளைந்துகொண்டு
ஜப்திகளாச்சி ஆடுமாடுகளெல்லாம் ஏலமாய்ப்போச்சி.

வீட்டுவரிவந்து வாசக்கால்தூக்குது
வியாபாரவரிவந்து சாமானைவளைக்குது
குப்பைவரிவந்து குடிசையைப்பிடுங்குது
கொளுத்தும்விளக்குவரி மூத்தைப்பிடிக்குது
வேடிக்கையாச்சி தட்டுமுட்டுகளெல்லாம் வியாபாரமாச்சி
களித்தின்றுபிழைக்கவும் கேவிறுமுறைக்குது
கம்புசோளங்கூட வம்புகள்செய்யுது
கூலிக்கிபோனாலும் லஞ்சங்கள்கேழ்க்குது
கொடுத்தாலும்நாலாநாள் அடித்துதுரத்துது (கால

சீமைசீட்டுகளெல்லாம் சிரிப்பாய்சிரித்துபோச்சி
சமுசாரிதாசியும் வேஷம்ஒன்றாய்போச்சி
பொருமையாய்பிழைத்தவா பிழைப்புக்கும்பிழுப்பாச்சி
பொய்சாட்சிசொல்வோர்க்கு கைமேற்காசியாச்சி
கடைகெட்டுப்போச்சி சர்வகுலங்களும் நடைதப்பியாச்சி
அந்தணர்குலத்துடன் ஆசாரம்போச்சி
அவரவர்சாஸ்திரம் பரணைமேற்றூங்குது
பணம்மென்றாற்பிணங்கூட வாய்கொஞ்சந்திறக்குது
பாசுபண்ணவர்பேச்சு வேலைக்குத்தொங்குது (கால)

தாயொப்பிவந்தாலும் சேயன்புணரலாச்சி
தம்பித்தமயன்பெண்டை தெம்பாயிழுக்கலாச்சி
நாய்போலேவிலைமாதர் யெங்கும்பெருத்துபோச்சி
நாயகனைப்பியே கூட்டிபிழைக்கலாச்சி
கனைகெட்டுப்போச்சி பணமேபெருமையாச்சி ஜாதிகள்பேச்சி
பலத்தவுத்தியோகத்தைப் பார்க்கமனைவியாச்சி
படுத்துயிருக்கும்போதே அடுத்துப்புணரலாச்சி
வழிகெட்டுப்போச்சி தகப்பன்பிள்ளையுங்கூட வழக்காடலாச்சி
பூமியிற்பிழைப்பற்று காவியுடுத்தலாச்சி
பூர்ணமாய்கெஞ்சாதம் அடித்துமயங்கலாச்சி
சாமியென்றவற்கு பேர்கள்நிகளமாச்சி
சாம்பலைபூசவுந் தெரியாததற்குசீச்சீ (கால)

கடுகடுத்துபெற்றத் தாயையுதைக்கலாச்சி
கட்டினமனைவிசொல் தட்டாதிருக்கலாச்சி
கொடுத்தகடனைக்கேட்டால் கோட்டுக்கிழுக்கலாச்சி
கொஞ்சமேமாய்ந்தாக்கால் பஞ்சாலடிக்கலாச்சி
அஞ்சாமல்போச்சிபெரியோர்சிறியோரென்ற அளவெல்லாம்போச்சி
அறுத்தமுண்டைகள்பிள்ளை பெற்றுவளர்க்களாச்சு
ஆப்பமின்மாந்தாக்கால் தாயைப்புணரலாச்சி
திருட்டுபிள்ளைகள்பெற்று முறித்துயெறிக்கலாச்சி
தெய்வத்தைநினைப்பவ லட்சத்தொருவராச்சி (கால)

கட்டிகொடுக்குமுன்னே -   கள்ளக்குட்டிகளாச்சி
கட்டினமூன்றுநாள்   பெற்றுமுறிக்கலாச்சி
மட்டிமுண்டைகளாலே   மானங்கெட்டுபோச்சி
மாதாபிதாபேச்சி   தலையைகுனியலாச்சி
அதிகமாய்போச்சி குடிகெட்டுமுண்டைகள் அணிபணியாச்சி
பெண்டுகள்வியாபாரஞ்   செய்துபிழைக்கலாச்சி
புருஷன்வெளுக்கக்கட்டி   பினத்தித்திரியலாச்சி
சண்டைசாடிகளெல்லாம்   பணத்தையிரைக்கலாச்சி
சாமிக்கிகொடுப்பவர்   தரையினில்மறந்தாச்சி (கால)

பஞ்சாங்கபடிப்பெல்லாம்   பஞ்சாய்பறந்துபோச்சி
பறைச்சிக்குபண்ணங்கந்து   சிரிப்பாய்நடக்கலாச்சி
அஞ்சாமல்பரசோற்றில்   அந்தணர்விழலாச்சி
[illegible]வர்கள்மனைவியெல்லாம்   அழுதுபலம்பலாச்சி
குலங்கெட்டுபோச்சி   அந்தணராலேகுடிகெட்டுபோச்சி
துரைக்குபிறந்தவன்போல்   டொப்பிசட்டைகளாச்சி
ஜோடும்செருப்பும்போச்சி   பூட்சுதூக்கலாச்சி
அடுப்பங்கரையிற்கூட   யிங்கிலீஷ்போலாச்சி
ஐயமார்குடிக்கவே   அடிக்கடிகடையாச்சி
சீமைதுரைகளெல்லாம்   கட்டைமாட்டலாச்சி
காலந்தலைகீழாச்சி   கருப்பங்குடியாய்போச்சி
கண்டவிடங்களெல்லாம்   பைபிலிரைக்கலாச்சி (கால)

வேதங்கள்பேச்சி கிறிஸ்தவர்கூச்சலே வேடிக்கையாச்சி

கோயிற்குளங்களெல்லாம்   குட்டிசுவராய்போச்சி
குடியாதிகமாச்சி   கடைகள்பெருத்துபோச்சி
கிராமதேவிகளெல்லாங்   கடையாய்பறந்துபோச்சி
கண்டவிடத்தில்வாந்தி   பேதியதிகமாச்சி
கலியுகநடத்தைக்கு   கடவுளுஞ்சிறிக்குது
காலத்திற்கேத்தாப்போல்   மாரிகள்வருகுது
[illegible]ருகாச்சலிற்பாதி   கூண்டோடேசாய்க்குது
குந்தியிருந்தபேரை   வாந்தியில்மடக்குது
பேதியிற்பாதியிப்படிமடிஞ்சியும் துள்ளுதேஐயோ

இன்றைக்கிருப்பவர்   நாளைக்கில்லையென்று
யார்க்குதெரியுமிந்த   வூர்க்குந்தெரியுமிது
ஏனோகெருவங்கொண்டு   வீணாகமடியுது
எண்ணிப்பார்த்தால்தினம்   ஆயிரஞ்சாவுது (சால)

பணங்கையில்வருதென்று   பொய்சாட்சிசொல்லாதே
பரதேசியேழைமேற்   புலிபோலேதுள்ளாதே
முழுவேசம்போட்டுநீ   மோசங்கள்செய்யாதே

மூச்சுவெளியேபோனால் சீச்சீபிணமாச்சே
செருவகைகொள்ளாதே-நிலையில்லாதழுதேநீ கெட்டுப்போகாதே
ஊற்றையுடலைநம்பி ஓதிபோலநிகளாமீதே
ஊரைப்பகைத்துக்கொண்டு வேறநடன்மாளாதே
காற்றைமலைத்துக்கொண்டு கருமங்கள்தேடாதே (காவ)

கலியுகச்சிந்து-முற்றிற்று.

கும்மி.

அண்ணனுக்குத் தம்பி துரோகஞ் செய்யுங்காலம், அப்பனை பிள்ளையுதைக்குங்காலம், பண்ணின நன்றி மறக்குங்காலம், பழிபாவத்துக்கஞ்சா கலிகாலம். ௧

புருஷனை பெண்டுருதைக்குங்காலம், பெற்ற பெண்ணை தகப்பன் புணருங்காலம், தருமநெறியை மறக்குங்காலம், கெட்ட தருதலைக்கேற்ற கலிகாலம். ௨

கொண்டபுருஷனை திட்டுங்காலம், இவள் கூலிகொடுத்துப்புணருங்காலம், முண்டைகள் பிள்ளை பெருகுங்காலம், ஐயா மானமில்லாத கலிகாலம். ௩

கட்டினமாது அலையுங்காலமிவன் காவியுடுத்தித்திரியுங்காலம் புட்டிபட்டியாய் குடிக்குங்காலமையா புளுகருக்கேற்ற கலிகாலம்.

பீயேயும் பீயெல்லும் படித்துவிட்டுமவர் பிழைக்க ஜீவனமில்லாமல், கையேந்தி பூரிகள் வாங்கி பிழைக்கிறார் கலியுககால மிதுவல்லவோ. ௫

விக்கிரமாதித்தனாளையிலுந் தர்மவேதநெறி நளன் காலத்திலும் அக்கிரமமிப்படி கேட்டதில்லை ஐயோ அந்தணர் உத்தியோகஞ் செய்ததில்லை. ௬

சொந்த புருஷனை திட்டுங்காலமிவள் சொல்லாமற் றாய்வீடு போகுங்காலம், கணவன் மனைவியை அழைக்க வந்தா லவனைக் கணடபடியாக திட்டுங்காலம். ௭

கள்ளத்தனமாய் புணர்ந்த பிள்ளை செத்துக் கண்டவிடத்திலெறிந்துவிட்டு, நல்ல சமுசாரிபோலே மினுக்கியே நாட்டை கெடுக்கும் கலிகாலம். ௮

புருஷனை பெண்சாதி திட்டுங் காலமையா புருஷன் றலையைக் குனியுங்காலம், கணவனை சாட்சியாய் வைத்துக்கொண்டு மிவள் கருத்தைபோலே நடக்குங் காலம். ௯

சொந்த பெண்சாதிக்குப் பயந்து விட்டுமவள் சொல்லாமல் ரெயிலேறுங்காலம், போனாலும் போகிறானென்று சொல்லியிவள் பெற்றுவளர்க்குங் கலிகாலம். ௰

பொய்யானபத்திர மெழுதுங்காலம், சாட்சிபூட்டியே கோட்டில் கெலிக்குங்காலம், தெய்வப் பொருளை திருடுங்காலமிது தீவினைக்கஞ்சாக் கலிகாலம். ௧௧

அருமையறியா முரட்டுக்காலமிது கர்மியைப்போற்றுந் திருட்டுக்காலம், சிறுமணலூர் முனிசாமிசொல் வாக்கியம் சோதித்துப்பார் கலிகாலகுணம். ௧௨

கும்மிப்பாட்டு-முற்றிற்று.

நொண்டிச்சிந்து.

ஆறுமாதக்கடங்காரர்-அவருக்கு அண்ணனென்று உரைக்கலாம், மாறுபாடிகள்-தாறுமாறுங் காடவர்கள் ஊரெங்குந்தானாய் வலிய வந்து கடன்கொடுத்து, பத்துக்கு அஞ்சி வட்டியாம் அந்தபத்திர மெழுதக்கூலி வேறேயாம், கருமத்தின் காசி வேறேயாம், இப்படி. தந்திரமாய் யேழைகள் வாயிலடித்து சுட்டுமுட்டு தவலை செம்பு பெட்டி முதல் தந்ததெல்லாம் வங்கமட்டும் வலித்துக்கொண்டுவாயிலொரு, கணக்குரைப்பார் கணக்கிலே வாங்கி வெகு நாளைப்போலே யெழுதிடுவார் பணத்தைக கொடுத்தனுப்புவார் வாங்கினவன் பாதி போகுமுன்னே சம்மனெடுப்பார்.
தந்தினம்

இப்படி இவர்களெழுவாம் நாட்டுகளில் ஈட்டிக்காரர்கோராமை கேட்கபயமாம், சைதாப்பேட்டை துண்டுகளையும் வைகுண்டசல்லாவைப்போல் கந்தைகளை வாரிக்கொண்டு வலைப்போல் புடவைகளையும் கணக்குதவா டாமேஜி துண்டு துண்டாய் கிழிந்துக்கொண்டு செம்மண்ணும்-பகுடர்களும் நல்ல சேறுபோலே குழைத்துதோய்த்துக்கொண்டு கஞ்சிலேபோட்டு பிழிந்த கந்தைகளை கருவாடுபோலுணர்த்தி நாட்டுப்புறங் காடுமேடெல்லாம் கும்பலாய் நாலைந்துபேராக நுழைந்து விடுவார், நெல்லூரு வேஷ்டிகளென்பார், இது மாட்டுத் தோலை போலிருக்கும், கிழியாதென்பார், கடனுக்கு தருவோமென்பார், நித்தியங் கலணு விழுக்காடு கொடுங்களென்பார், தெரியாமல் கடனெடுத்தால், தெருவுவாசற்படியில் படுத்து காரிமுழிவர் கொடுத்த கடனைக்கேட்பார் அவர் குந்தினயிடத்தை விட்டு அசையமாட்டார் சூனியங்கள் வைப்போமென்பார் ஆடு-மாடு-சுருண்டிடும் யேவலிதோ செய்குறோமென்பார்
தந்தினம்

உலகமறியாதவரும் ஒருவருங்காணாதமீ ஒருநாளு மில்லாத தேதியில் ஊரிலில்லாத வூரிலிருக்கும் கலைசாய்ந்த தாண்டவராய முதலியார் குமாரன் சனியன் பிடித்த சாம்பவசதாசிவ முதலியாருக்கு சரிபடாத வூரிலிருக்கும் பித்தம்பிடித்த பேயாண்டி செட்டியார் குமாரன் பேரில்லாதவன் பிரட்டியெழுதிக்கொடுத்த குதுவையில்லாத கடன்பத்திரமாவதென்னவென்றால் இப்பவும் யென்னுடைய வீட்டிற்கு வடக்கு இவளுடைய வீட்டிற்குத் தெற்கு இந்த நாற்

பாங் கெல்லேக்குட்பட நிச்சயித்து சென்னப்பட்டணம் ஸிலாமணி ராசி கும்பினி ரூபாய் ரு௱-இந்த ரூபாய் ஐந்நூற்றுக்கு மாதம் க-க்கு ரு௱ ௱-க்கு வட்டி ரூபா க-ஆக ஏறின வட்டியும் முதலும் தாங்கள் வேண்டாதபோது கொடுக்காமற் போகக்கடவேனாகவும் ஒருசமயம் அப்படிக்குக் கொடுக்கும்படிக்கு அப்பியந்தப்பட்டால் தாங்கள் எந்த கோர்ட்டிலாவது போட்டு கோர்ட்டுச் சிலவில்லாமல் அசல் பூஜியமாய்ப் போகக் கடவீராகவும், இப்படிக்கு என்னுடைய மனோ ராஜியில் சம்மதித்து எழுதிக்கொடுத்த குதுவையில்லாத கடன் பத்திரம்.

இதற்குசாட்சியிவனே அவனே எழுதினவனெவனே கைபெழுத்து

நடுவீதிநாராயணன்.

கலிகாலக் கண்ணடி.

தகப்பனுக்குமகனுழவு ப்ழக்குங்காலம்
தமயனுக்குதம்பிபுத்தி சொல்லுங்காலம்
குருக்களிருந்தாசனத்தி லிருக்குங்காலம்
கொடுத்தகடன்கேட்பவரை உதைக்குங்காலம்
வலக்கைபிடித்தாசாணி சுற்றிவந்து
மாப்பிள்ளையைமருந்திட்டுக் கொல்லுங்காலம்
கணக்கருக்கு அடிவழக்குபேசுங்காலம்
கலிகாலமாமிந்த காலந்தானே (க)

வாய்வேகமாகரெயில் ஓடுங்காலம்
வாய்பேச்சுதந்திவழிப் பேசுங்காலம்
தாய்பேச்சுபிள்ளைகட்கு விஷமாங்காலம்
தன்மனைவிமனதின்படிபோல் நடக்குங்காலம்
நாய்போலவிலேமாதர் பெருத்தகாலம்
நம்பினேனென்பவரைக் கெடுக்குங்காலம்
காதலெனும்மனையாளை வணங்குங்காலம்
கலிகாலமாமிந்த காலந்தானே (உ)

முண்டச்சிகள்சந்துசந்தாய் திரியுங்காலம்
முலைகாட்டிமூசுண்டை பரிக்குங்காலம்
தங்கைதனைதமயன்பெண் டாளுங்காலம்
தமயன்பெண்டைதம்பிசிறை யெடுக்குங்காலம்
பருவப்பெண்திண்ணைமேல உட்காருங்காலம்
பரிகாசவார்த்தைதனைப் பேசுங்காலம்
கருவழிக்கமருந்திட்டு கொல்லுங்காலம்
கலிகாலமாமிந்த காலந்தானே (ந)

மாமனையேமருமகளும் புணருங்காலம்
மாமியார்மருமகனை மருவுங்காலம்

பெற்றவளும்பிள்ளைகளைச் சேருங்காலம்
பெண்ணவளுந்தகப்பனையே புணருங்காலம்
தன்மனைவிதிலோத்தமையோ விருக்குங்காலம்
தடியர்களுஞ்சந்துசந்தாய் திரியுங்காலம்
காமமெனுங்கருங்கடலில் மூழ்குங்காலம்
கலிகாலமாமிந்த காலந்தானே (௪)
தங்கையைப்பற்றுதிண்ணைமேல் உட்காருங்காலம்
சமுசாரியென்கிறபேர் நீளுங்காலம்
கொங்கைதனைக்காட்டியே அழைக்குங்காலம்
கொழுந்தனுடன்ஆசைவைத்துப் பேசுங்காலம்
பாட்டிகளைப்பேரன்பெண் டாளுங்காலம்
பாலகனைப்பெற்றுதா லாட்டுங்காலம்
களிப்புடனேஉடப்பிறப்புப் புணருங்காலம்
கலிகாலமாமிந்த காலந்தானே (௫)
கணவனையேமத்தாலே அடிக்கலாச்சு
களிப்புடனேதாய்வீடு சேரலாச்சு
பெண்ணவளுந்தாய்வீடு போகலாச்சு
பெற்றவருங்கூட்டியே பிழைக்கலாச்சு
களிப்புடனேகூட்டியே கொடுக்கலாச்சு
கலிகாலமாமிந்த காலந்தானே (௬)
அவுசாரிவுலகத்தில் அனேகமாச்சு
அன்னநடைகாசிகட்கு பிழைப்பும்போச்சு
புவிமீதில்கவிவாணர் சிறப்பும்போச்சு
புத்தியில்லாமடையருக்கே காலமாச்சு
பருவப்பெண்பாட்டுகளும் பாடலாச்சு
பழுத்தகிழமாப்பிள்ளையை புணரலாச்சு
கற்றவரைக்கல்லாதார் இகழலாச்சு
கலிகாலமாமிந்த காலந்தானே (௭)
பிள்ளைபெற்றுஆற்றோரம் போடலாச்சு
புருஷனடித்தால்விறைபை பிடிக்கலாச்சு
முண்டைகளும்புருஷனையே தேடலாச்சு
முகமினுக்கிக்கண்டபடி திரியலாச்சு
அண்டைவீட்டுமன்னர்களை கெடுக்கலாச்சு
அடித்தவரை அன்றைக்கே கொல்லலாச்சு
கொண்டைக்குமினுக்கெண்ணை பூசலாச்சு
கொழுந்தனுக்குபிள்ளைபெற்று வளர்க்கலாச்சு
கன்னியர்கள் கண்டவரை புணரலாச்சு
கலிகாலமாமிந்த காலந்தானே (௮)

கலிகாலக்கண்ணாடி-முற்றிற்று,